**பிரஸார் பாரதி**
**அகில இந்திய வானொலி, சென்னை-4**

**27 10 2025 MONDAY 7.15 PM**

**ஆகாஷவாணி**

**தலைப்புச் செய்திகள்**

1. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளம் காவல்துறை அதிகாரிகள் முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. தமிழகம் உட்பட ஏழு இடங்களில் மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தி ஆலைகள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. தீவிரவாதத்துக்கு எதிராக உலக நாடுகள் உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. பீகாரில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

5. ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் மகாராஜன் ஆறுமுகப்பாண்டியன் இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றார்.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளம் காவல்துறை அதிகாரிகள் முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், இந்திய காவல் பணி பயிற்சி அதிகாரிகள் இடையே உரையாற்றிய அவர், விரைவில் காவல்துறையில் உயர் பதவியை ஏற்க உள்ள அதிகாரிகள் தங்களின் கடமையையும், பொறுப்பையும் உணர்ந்து செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தங்கள் பணியில் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள நேரிடும்போது காவல் அதிகாரிகள் நெறிமுறைகளை பின்பற்றி நேர்மையான நடைமுறைகளை மேற்கொள்வதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

திறமையான அதிகாரிகளாக உருவாவதற்கு ஐ பி எஸ் அதிகாரிகள் தங்களின் தனித்திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்றும், காவல் பணியில் தொழில்நுட்பம் என்பது முக்கியமான இடத்தை பெற்றுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் போன்ற நவீன தொழில்நுட்பங்களை இளம் ஐ பி எஸ் அதிகாரிகள் கடைபிடிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாகவும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் அடுத்த ஐந்தாண்டுகளில் கூட்டுறவு அடிப்படையில், 200 ஆழ்கடல் மீன்பிடி கப்பல்கள் வழங்க அரசு திட்டமிட்டிருப்பதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மும்பையில் இரண்டு ஆழ்கடல் மீன்பிடி கப்பல்களை வழங்கி அவர் பேசினார்.

நாட்டின் மீன்பிடி தொழிலை வலுப்படுத்தவும், கடின உழைப்பை வழங்கும் மீனவர்களுக்கு லாபத்தை உறுதி செய்யவும் ஏதுவாக, கடல் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு ஒருங்கிணைந்த திட்டத்தை அறிமுகப்படுத்த அரசு முடிவு செய்திருப்பதாக அவர் கூறினார்.

இந்தியாவின் மிக நீண்ட கடலோர பகுதிகளில் ஏராளமான மீன்பிடி தொழில் வாய்ப்புகள் இருப்பதையும் திரு அமித் ஷா சுட்டிக்காட்டினார்.

<<<<<>>>>>>

தமிழகம், ஆந்திரா உள்ளிட்ட ஏழு இடங்களில் 5 ஆயிரத்து 535 கோடி ரூபாய் முதலீட்டில், மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தி ஆலைகள் அமைப்பதற்கான ஒப்புதல்

அளிக்கப்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் மின்னணு பொருட்கள் தேவையை பூர்த்தி செய்வதற்கு இந்த ஆலைகள் வழிவகுக்கும் என்று கூறினார்.

நாட்டின் தொழில்வளர்ச்சியை சமநிலைப்படுத்துவதற்கும், மண்டல அளவிலான உற்பத்தி திறனை மேலும் வலுப்படுத்துவதற்கும் இந்த ஆலைகள் உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கணினி தொடர்பான உதிரி பாகங்கள், கேமரா கருவிகள் உள்ளிட்ட முக்கிய மின்னணு உதிரி பாகங்களை தயாரிப்பதன் மூலம், இந்தியா சுயசார்பு நிலையை உறுதி செய்யும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

தீவிரவாதத்துக்கு எதிராக உலக நாடுகள் உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் நடைபெறும் 20-ஆவது கிழக்காசிய உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், உலகின்

அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக தீவிரவாதம் திகழ்கிறது என்று கூறினார்.

தீவிரவாதத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், உலக நாடுகள் ஒன்றிணைந்து அதற்கு எதிரான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஆசியான் நாடுகளுடன் கடலோர ஒத்துழைப்பில் மேலும் இணைந்து செயல்பட இந்தியா உறுதிபூண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

அடுத்த ஆண்டு ஆசியான் - இந்தியா நாடுகளின் கடலோர ஒத்துழைப்புக்கான ஆண்டாக கடைபிடிக்கப்படும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

முன்னதாக, மாநாட்டிற்கு இடையே ஜப்பான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு Toshimitsu Motegi–யை, டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

இருநாடுகளுக்கும் இடையே அடுத்த பத்தாண்டுகளுக்கான ஒத்துழைப்பு தொடர்பான கூட்டு செயல்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டதாக சமூக வலைதளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

அடுத்த தலைமுறை GST சீர்திருத்தம் அமல்படுத்தப்பட்ட பின்னர் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியை நோக்கி முன்னேறி வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செப்டம்பர் மாதத்திற்கான பொருளாதார அறிக்கையில், GST குறைக்கப்பட்ட பின்னர் மக்களின் வாங்கும் திறன் அதிகரித்திருப்பதுடன், பொருளாதாரத்தில் நேர்மறையான தாக்கம் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கியமான துறைகளில் அதிக அளவில் விற்பனை நடைபெற்றிருப்பதாகவும், எதிர்வரும் மாதங்களில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேலும் வலுவடையும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

பண்டிகை காலத்தில் நுகர்வோர் அதிக அளவிலான பொருட்களை வாங்கியதன்மூலம், வேலைவாய்ப்புகளும் அதிகமாக உருவாக்கப்பட்டிருப்பதாக நிதியமைச்சகத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<<>>>>>>

Seychelles சென்றுள்ள குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், அந்நாட்டின் புதிய அதிபர் டாக்டர் Herminie-ஐ சந்தித்து பேசினார்.

**இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு சி பி ராதாகிருஷ்ணன், இந்தியா - Seychelles இடையே இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து தாம் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.**

**இந்திய பெருங்கடல் பகுதியிலும், தெற்கு நாடுகளிலும் அமைதி, ஸ்திரத்தன்மை, முன்னேற்றத்திற்கான எதிர்கால பார்வை குறித்த கருத்துக்களை இந்த சந்திப்பின்போது பரிமாறிக் கொண்டதாகவும் திரு சி பி ராதாகிருஷ்ணன் அதில் கூறியுள்ளார்.**

<<<<<>>>>>>

**விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியது அவசியம் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.**

**புதுதில்லியில் தேசிய விதை கழகத்தின் சார்பில், விதைகள் பதப்படுத்துதல் மையத்தை திறந்துவைத்து அவர் பேசினார்.**

**இந்த மையம் விவசாயிகளுக்கு உயர்தரத்திலான விதைகள் கிடைப்பதை உறுதி செய்யும் என்றும், இதன்மூலம், வேளாண் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கும் என்றும் அவர் கூறினார்.**

தரமற்ற மற்றும் போலியான விதைகள் தொடர்பாக வேளாண் அமைச்சகத்திற்கு ஏராளமான புகார்கள் வந்ததால், தற்போது இந்த விதை பதப்படுத்துதல் மையம் திறந்துவைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

பரேலி, தார்வாட் உள்ளிட்ட ஐந்து இடங்களில் அமைக்கப்பட்டுள்ள இதுபோன்ற விதை பதப்படுத்தும் மையங்களையும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் காணொலி வாயிலாக திறந்துவைத்தார்.

<<<<<>>>>>>

பீகாரில் அடுத்த மாதம் இரண்டு கட்டங்களாக சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

அடுத்த மாதம் 6 மற்றும் 11ஆம் தேதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்று, 14ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது.

பீகாரில் பிஜேபி, ஐக்கிய ஜனதா தளம், லோக் ஜனசக்தி-பாஸ்வான் பிரிவு உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய தேசிய ஜனநாயக கூட்டணியும், காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதா தளம், இடதுசாரி கட்சிகளை உள்ளடக்கிய எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியும் நேரடியாக போட்டியிடுகின்றன.

தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி ஏற்கனவே பிரச்சாரம் மேற்கொண்டுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜெ.பி. நட்டா ஆகியோரும் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

இதனிடையே, மத்திய அமைச்சரும், பிஜேபி தலைவர்களில் ஒருவருமான திரு. கிரண் ரிஜிஜு இன்று, செய்தியாளர்களிடம் பேசுகையில், காங்கிரஸ் கட்சியும், ராஷ்ட்ரிய ஜனதா தளமும் அரசியல் சட்டத்தை மதிக்காமல் செயல்படுவதாக குற்றம் சாட்டினார்.

காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, முஸாபர்பூரில் நாளை மறுநாள் பிரச்சாரம் மேற்கொள்ளவுள்ளார்.

காங்கிரஸ் சார்பில் திரு. மல்லிகார்ஜுன கார்கே, திருமதி. சோனியா காந்தி, திரு. ராகுல் காந்தி, திருமதி. பிரியங்கா காந்தி உள்ளிட்ட 40 பேர் நட்சத்திர தலைவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

ராஷ்ட்ரிய ஜனதா தள கட்சித் தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பாட்னா உள்ளிட்ட பல்வேறு நகரங்களிலும் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>>

ஆந்திர கடலோரப்பகுதியில் **Montha** புயல் நாளை கரையை கடக்கும் என கணிக்கப்பட்டுள்ள நிலையில், ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடுவுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

புயலை எதிர்கொள்ள எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அப்போது பிரதமர் கேட்டறிந்ததாகவும், மாநிலத்திற்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என உறுதியளித்ததாகவும் திரு சந்திரபாபு நாயுடு வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் மகாராஜன் ஆறுமுகப்பாண்டியன் இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றார்.

பக்ரைனில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் பளுதூக்கும் 60 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கங்களை கைப்பற்றினார்.

மகளிர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் Kushi Chand, Ahaana Sharma, Chandrika Pujari மற்றும் Anshika அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் தொடர் ஓட்டத்தில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

இப்போட்டியில், இந்தியா இதுவரை 3 தங்கம், 8 வெள்ளி, 11 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

<<<<<END>>>>>>